



மதுரை மாநகருக்கு வருகை தரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் தெப்பக்குளம் பகுதியில் சிறப்பான வரவேற்பு கொடுப்பது மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து மாவட்ட அவைத் தலைவர் மா.ஒச்சுபாலு தலைமையில் நடைபெற்ற கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ., சிறப்புரையாற்றினார். உடன் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், மாநில தணிக்கைக் குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.ஜெயராம், மாவட்ட நிர்வாகிகள் சின்னம்மாள், ராகவன், முருகவேல், மாநில நிர்வாகிகள் அக்ரி கணேசன், சம்மட்டிபுரம் கணேசன், பாக்கியநாதன், மதுரை பாலா, மதுரை மத்திய தொகுதி தலைமைக் கழக பொறுப்பாளர் வி.பி.ராஜன் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் திரளாக பங்கேற்றனர்.

### தூத்துக்குடி தெற்கு மாவட்டம் சார்பில்

# திருச்செந்தூரில் - மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

திருச்செந்தூர், ஜன.25-

திருச்செந்தூரில் ஜன.25ல் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீர வணக்கநாள் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.கழகம் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25ல் நாள் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் நாளாக கடைபிடித்து வருகிறது. தாய் மொழியாம் தமிழ் மொழியை பாதுகாத்திட, பெரும் போராட்டங்கள் 1938ம் ஆண்டிலும் பின்னர் 1960ம் ஆண்டுகளில் தொடர்ச்சியாகவும் நடைபெற்றன. ஒன்றிய அரசின் இந்தி மொழி திணிப்பிற்கு எதிராக அன்றைய காலகட்டத்தில் மாணவர்கள் பெரும் போராட்டங்களை நடத்தினர். அப்போராட்டங்களில் தாய்மொழிக்காக உயிர் நீத்த தியாகிகளின் நினைவாக மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் கடைபிடிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு மொழிப் போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம், மிகவும் எழுச்சியுடன் நடத்திட வேண்டுமென தி.மு.க தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

அதன்படி தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில், திருச்செந்தூர் நகரத்தில் ஆடுயு அலுவலகம் எதிர்புறத்தில் ஜனவரி 25 மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. கூட்டத்திற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சு.அருண்குமார் தலைமை தாங்குகிறார். மற்றும் மாணவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் திருச்செந்தூர் தொகுதி ஒன்றிய, நகரச் செயலாளர்கள், நகர்மன்ற தலைவர் சிவஆனந்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் கூட்டத்தில் திருச்செந்தூர் ஒன்றியக் கழக செயலாளர் ஏ.பி. ரமேஷ் வரவேற்புரையாற்றுகிறார்.

தி.மு.க மாவட்டப் செயலாளர் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தலைமைக் கழக சொற்பொழிவாளர்கள் ஆரூர் மணிவண்ணன், திருப்பூர் கூத்தரசன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். திருச்செந்தூர் நகரச் செயலாளர் ஆர்.சுடலை நன்றியுரையாற்றுகிறார்.

கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், வட்டம், வார்டு கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் மாவட்டம் முழுவதும் உள்ள கழக செயல் வீரர்கள், பொதுமக்கள், மாணர்கள், இளைஞர்கள் பெருந்திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தேனி நெடுஞ்சாலை கோட்டம் மற்றும் சாலைப் பாதுகாப்பு மதுரை கோட்டம் இணைந்து சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை தேனி பங்களாமேட்டில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஷஜீவனா, மாவட்டகாவல் கண்காணிப்பாளர் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். பேரணியில் . சு.சுவாமிநாதன், கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை), கட்டுமானம் (ம) பராமரிப்பு, தேனி கோட்டப் பொறியாளர்,வரலட்சுமி மதுரை நெடுஞ்சாலை, சாலைப் பாதுகாப்புகோட்டம், தேனி போக்குவரத்து காவல் ஆய்வாளர் .சஜீகுமார், உதவிக் கோட்டப் பொறியாளர்கள் ஏ.ராமமூர்த்தி, சாந்தினி, திருக்குமரன்,ராஜா மற்றும் உதவிப்பொறியாளர்கள் ராஜசேகரன்.காவ்யாமீனா, செல்வி.ஐஸ்வர்யா ஆகியோர் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கீழப்பழூர் சின்னச்சாமி**
**சனவரி 25 (1964)**



**இந்தித் திணிப்பை எதிர்த்து தனது 27வது வயதில் தமிழ்மொழி காக்க – திருச்சி மாவட்டம், கீழப்பழூர் என்கிற சிற்றூர் கழகத் தோழர் திருச்சி ரயில் நிலையத்தின் வாசலில் விடியற்காலை 4.30 மணிக்கு தன் தலையில் பெட்ரோலை ஊற்றிக் கொண்டு நெருப்பில் பற்றவைத்து, கொழுந்துவிட்டு எரியும் தீச்சுவாலைகளுக்கு இடையே 'தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க!' என முழக்கமிட்டபடி தியாகத் தீயில் தன்னை மாய்த்துக் கொண்ட தீரன்.**

**"இந்தி எதிர்ப்புப் போரில் முதன்முதலாகத் தீக்குளித்தவர் என் கணவர்தான். அந்தப் பெருமை ஒன்றுதான் அவர் எனக்கு விட்டுப்போன சொத்து" என அவரது துணைவியார் தெரிவித்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### இந்தியாவில்

# வாக்காளர் எண்ணிக்கை 100 கோடியை நெருங்கியது!

புதுடெல்லி, ஜன. 25–

இந்திய தேர்தல் ஆணையம் கடந்த 1950ம் ஆண்டு ஜனவரி 25ம் தேதி நிறுவப்பட்டது. இந்த நாள் ஆண்டுதோறும் தேசிய வாக்காளர் தினமாக கொண்டாடப்படுகிறது.

அதன்படி, வாக்காளர் தினம் கொண்டாடப்பட உள்ள நிலையில், இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில், நாட்டின் வாக்காளர்கள் எண்ணிக்கை 99.1 கோடியாக அதிகரித்துள்ளதாக கூறி யுள்ளது.

இதில் 18 முதல் 29 வயதுக்குட்பட்டவர்கள் எண்ணிக்கை 21.7 கோடி என்று குறிப்பிட்டுள்ளது.

வாக்காளர்களில் பாலின விகிதம் கடந்த ஆண்டில் 948 ஆக இருந்ததாகவும், தற்போது 954 ஆக அதிகரித்துள்ளதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

# பிறப்புரிமை அடிப்படையிலான குடியுரிமை ரத்து!

## ட்ரம்ப் உத்தரவுக்கு அமெரிக்க நீதிமன்றம் தடை!

சியாட்டல், ஜன. 25 –

அமெரிக்காவின் புதிய அதிபராக கடந்த 20ம் தேதி பொறுப்பேற்ற டொனால்ட் ட்ரம்ப், வெளிநாட்டவர்களின் குழந்தைகளுக்கு பிறப்புரிமை அடிப்படையில் குடியுரிமை வழங்கப்படும் நடைமுறை ரத்து செய்யப்படுவதாக அறிவித்தார்.

ட்ரம்பின் உத்தரவால் அமெரிக்காவில் வாழும் லட்சக்கணக்கான இந்தியர்கள் உள்பட பல்வேறு வெளிநாட்டினரும் நெருக்கடியை சந்தித்துள்ளனர்.

ட்ரம்ப் அறிவிப்புக்கு எதிராக 22 மாகாணங்கள் மற்றும் பல்வேறு மனித உரிமை அமைப்புகள் வழக்கு தொடர்ந்தன.

சியாட்டல் மாகாண நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதி ஜான் கோக்னார், ட்ரம்ப்பின் உத்தரவு அரசியல் சாசனத்துக்கு விரோதமானது எனக் கூறி அந்த உத்தரவுக்கு தற்காலிக தடை விதித்தார்.

இதன் மூலம் ட்ரம்ப் உத்தரவு அமலாவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# கூவாய் இளங்குயிலே!



ஏட்டைத் திருப்பி, இந்தி
எழமீண்டும் துடிக்கிறது!
சாட்டைஎடுப் பான்தமிழன்!
சண்டிஇந்திக் குதிரை,அதன்
சேட்டை ஒடியும்என்றும்
செங்கோட்டை யின்கனவுக்
கோட்டை இடியும்என்றும்
கூவாய் இளங்குயிலே!

துதிக்கும்உங்கள் இந்தியினைத்
தூக்கி,எங்கள் மொழிப்பற்றை
மிதிக்க நினைப்பீரேல்,
மேலாதிக் கச்சுவடு
பதிக்கத் துடிப்பீரேல்,
படைமறவர் பெருங்கூட்டம்
குதிக்கும் களத்தில்! எனக்
கூவாய் இளங்குயிலே!

வாடிக்கை யான(து)இந்தி
வாலாட்டம்! இனியும்இந்த
வேடிக்கை ஆணவத்தை
வேரோ டறுக்காமல்
நீடிக்க விடலாமா?
நெருப்பெடுத்துப் பதினாறு
கோடிக்கை நீளும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

சொந்தமண்ணில் "நீட்" கொடுத்த
சோகம்இன்னும் தீரவில்லை!
வெந்தபுண்ணில் இந்திஎன்னும்
வேல்பாய்ச்ச முனைவாரேல்,
செந்தமிழர் தாய்மண்ணில்
தெருதோறும் உணர்வெழுச்சி
கொந்தளிக்கும்! என்றுசொல்லிக்
கூவாய் இளங்குயிலே!

ஐயா,அண் ணா, கலைஞர்
அவர்கள்இல்லை எனும்திமிரா?
தொய்வறியாத் "தளபதி"யின்
சுட்டு விரலசைந்தால்
எய்த நினைக்கும்உங்கள்
"இந்திவெறிக் குறிக்கோளைக்"
கொய்(து)எறிவான் தமிழன்!எனக்
கூவாய் இளங்குயிலே!

கருத்துமொழி! கவிதைமொழி!
காவியங்கள் விளைத்தமொழி!
கிருத்து பிறக்குமுன்பே
கிளைவிரித்துத் தழைத்தமொழி!
திருத்தமிகு தமிழ்மொழிக்கோர்
தீங்குவிளைத் தால்,இந்திக்
குருத்தெலும்பு முறியும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

மறப்போமோ வரலாற்றை?
மாநிலத்தின் உரிமைகளைப்
பறிப்பாரேல் பொறுப்போமோ?
பார்த்துக்கொண் டிருப்போமோ?
வெறுப்பேற்றும் இந்தியினை
விரட்டுதற்கே, அறப்போர்க்குக்
குறிப்பார்ஓர் நாள்!என்று
கூவாய் இளங்குயிலே!

வம்புக்குச் செலமாட்டான்!
வலியவந்தால் விடமாட்டான்!
"தம்பியர்" பற்றி, அண்ணா
தான்வரைந்த கடிதம்இது!
தெம்புடைய தாய்மொழியைத்
தீண்டுவரேல், இந்திமொழிக்
கொம்புடைந்து நொறுங்கும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

பகைவிட்டுப் போகும்எனப்
பண்பாடு காத்துவந்தோம்!
மிகைவிட்டுப் போகாமல்
மென்மேலும் வடபுலத்துப்
புகைவிட்டுப் பரப்புவரேல்,
புலிச்சீற்றத் தமிழ்க்கூட்டம்
குகைவிட்டுப் பாயும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

தண்டுவடம் வளைந்தவர்கள்
தலைகவிழ்ந்தார் உங்களிடம்!
ஒண்டமிழ்த்தாய் மொழிகாக்கும்
"உதயநிதி ஸ்டாலின்" படைத்
தொண்டரடா நாங்கள்! எனத்
தோள்நிமிர்த்திப் புயல்வேகம்
கொண்டெழுந்தார் வீரர்! எனக்
கூவாய் இளங்குயிலே!

குழந்தையுடன் தாய்வருவாள்!
குமுறிஎழு வார்இளைஞர்!
விழுந்துப் படுத்துறங்கும்
வீட்டு முதியவரும்
எழுந்துப் புறப்படுவார்!
எட்டுத் திசைகளும், தீக்
கொழுந்து தெறிக்கும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

" பண்டிதரின் வாக்குறுதி"
பறக்கிறதே காற்றில்! அதைக்
கண்டுகொள்ள மறுக்கிறதே
கல்நெஞ்சம்! "தாமரை" யின்
தண்டறுந்து போகும்! எங்கள் .
"தமிழ்க்கோபம்" ஏவுகணைக்
குண்டைவிட வலியதெனக்
கூவாய் இளங்குயிலே!

காட்டாட்சி தொடராமல்
காவிநிறம் படியாமல்
நாட்டாட்சி "இறையாண்மை"
நலியாமல், தில்லியிலே,
பாட்டாட்சி நிலவுதல்போல்
"பன்முகத்தன் மை" போற்றும்
கூட்டாட்சி மிளிர்க! எனக்
கூவாய் இளங்குயிலே!

தொடராதீர் மொழிவெறியை!
தூங்கும்என்று வேங்கையின்கால்
இடறாதீர்! வடவர்களே!
எரிமலைகள் வெடிக்கின்ற
திடலாகும் தமிழ்நாடு!
" திராவிடநல் திருநாட்டில்"
கொடியஇந்தி வீழும்!எனக்"
கூவாய் இளங்குயிலே!

நஞ்சருந்தித் தீக்குளித்து
நந்தமிழைக் காப்பதற்கே
நெஞ்சுயர்த்தி இன்னுயிரை
நீத்தார்தம் நினைவலைகள்
சஞ்சரிக்கும் சுடுகாட்டுச்
சாம்பலில் இருந்து,அக்னிக்
குஞ்சுகள் கிளம்பும்!எனக்
கூவாய் இளங்குயிலே!

ஆலமரம் வீழ்ந்ததுபோல்
ஆவிதந்தார் தாய்மொழிக்கே!
மாலையிட்டு, மலர்தூவி
வணங்குகின்றோம் அவர்நினைவில்!
காலப்பொன் னேட்டில்,ஒளிர்
கல்வெட்டாய் அவர்பெருமை
கோலோச்சி விளங்கும்எனக்
கூவாய் இளங்குயிலே!



**கவிச்சுடர் கவிதைப்பித்தன்**

### ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலில்

# கழக வேட்பாளர் வெற்றிபெற பூசாரிகள் நலச் சங்கம் பாடுபடும்!

## சங்க மாநிலத் தலைவர் பி.வாசு அறிக்கை!

சேலம், ஜன. 25–

கோவில் பூசாரிகள் நலச் சங்க மாநிலத் தலைவர் பி.வாசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளராகப் போட்டியிடும் வி.சி. சந்திரகுமாரை ஆதரித்து மகத்தான அளவில் வெற்றி பெறச் செய்ய சேலத்தை தலைமை இடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச் சங்கம் முடிவு செய்துள்ளது.

இடைத்தேர்தலில் போட்டியிடும் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் வி.சி. சந்திரகுமாரை ஆதரித்து சேலத்தை தலைமை இடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச் சங்க உறுப்பினர்களும் அவர்களது குடும்பத்தினரும் ஏக மனதாக வாக்களித்து வெற்றி பெறச் செய்ய அரும்பாடுபடுவார்கள் என்பதைத் தங்களது மேலான கவனத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் 20 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற 60 வயதிற்கு மேற்பட்ட கோவில் பூசாரிகளின் மாத ஓய்வூதியத்தை ரூ. 4000 ஆக உயர்த்தியது

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஒரு கால பூஜை நடைபெறும் 17500 திருக்கோவில்களில் பணியாற்றும் பூசாரிகளுக்கு அகில இந்திய அளவில் முதல் முறையாக மாதம் 1,000 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கி சாதனை படைத்தது.

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள 10 பெரிய திருக்கோவில்களில் பக்தர்களின் பசியாற முழு நேர அன்னதானத் திட்டத்தைச் செயல்படுத்தியது

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் சிதிலமடைந்த திருக்கோவில்களைப் புனரமைக்க திருப்பணி நிதியை ரூ. 2.50 இலட்சமாக உயர்த்தியது மற்றும் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு கால பூஜை நடைபெறும்திருக்கோவில்களின் வங்கி வைப்பு நிதியை 2.50 லட்சமாக உயர்த்தியது.

அரசியல் வரலாற்றில் இதுவரை எங்கும் இல்லாத அளவில் ஆறுமுகப் பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருஆவினன்குடி எனப் போற்றப்படும் பழனியில் முத்தமிழ் முருகன் மாநாடு நடத்தி சாதனை படைத்தது தங்கள் தலைமையில் இயங்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு தான்.

இவ்வாறு எண்ணற்ற நலத்திட்டங்களை பூசாரிகளின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் தொடர்ந்து செயல்படுத்தி வரும் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு சேலத்தைத் தலைமை இடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச் சங்கம் என்றும் உறுதுணையாகச் செயல்படும். இத்தகைய பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வரும் திராவிட முன்னேற்றக் கழக அரசை ஆதரிக்கும் வகையில் ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் வி.சி. சந்திரகுமாரை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து தங்களுக்கு காணிக்கையாகச் சமர்ப்பிக்க உறுதி பூண்டுள்ளோம்.

இவ்வாறு பூசாரிகள் நலச்சங்க மாநிலத் தலைவர் பி.வாசு தெரிவித்துள்ளார்.

## இன்று (ஜன.25) - மொழிப்போர்த் தியாகிகளுக்கு

# தமிழ்நாடு முழுவதும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

**பல்லாவரம் - முதல்வர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் - பொருளாளர் டி.ஆர்.பாலு, காஞ்சிபுரம் - பொதுச்செயலாளர் துரைமுருகன், திருச்சி - முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, மதுரவாயல் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்!**

## தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

**இந்தி புகுந்தது நாட்டிலே - இன்னும்**
**என்னசெய் கின்றீர் வீட்டிலே?**
**மைந்தர்அன் னைதந்தை யாவரும்ஓடி**
**வாருங்கள் போர் எல்லைக் கோட்டிலே.**

**இன்பத்தி ராவிட நாட்டினைஉண்**
**டேப்ப மிடும்ஏற் பாட்டினைப்**
**பன்முறை யும்செய்து பார்த்தனர்இன்னும்**
**பார்ப்பா ரானால் பார்க்கட்டுமே.**

**செத்த வடமொழி காட்டியும்நம்**
**செந்தமிழ் மேன்எய்த ஈட்டியும்**
**பொத்தென வீழ்ந்தது பன்முறைஇந்திப்**
**பூச்சாண்டி காட்டினர் இம்முறை.**

**- பாவேந்தர்**

- பெரும் சிறப்புப் பெற்ற நம் தாய் மொழியாம் தமிழ் மொழி, நீராலும் - நெருப்பாலும், வஞ்சகர்களின் வெறுப்பாலும் வெல்லமுடியாத வீழ்த்த முடியாத செம்மாந்த மொழியாகும்! தத்தமது உரைநடையின் வாயிலாகவும், கவிதைத் தீரமுடனும் தமிழறிஞர்கள் பலர் தங்கள் விழியெனப் போற்றி வளர்த்த வண்டமிழ் மொழியாகும்.

1938ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஆட்சி புரிந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள், தமிழ்நாட்டு மாணவர்கள் இனி இந்தி கட்டாயமாக கற்க வேண்டுமென்ற அறிவிப்பினை எதிர்த்து, 27.02.1938 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு மாநாட்டில், தாய் மொழியை காக்க இந்தி திணிப்பினை எதிர்க்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டு அதனடிப்படையில், தந்தை பெரியார், மறைமலை அடிகள், திரு.வி.க., நாவலர் சோமசுந்தர பாரதி, பேரறிஞர் அண்ணா போன்ற தமிழறிஞர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் தாய் மொழி காக்க களம் கண்டனர்.

அப்போது, 14 வயதே ஆன பள்ளி மாணவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திருவாரூர் வீதியில் தன்னுடன் பயிலும் மாணவர்களை அணி திரட்டி, "கயல், வில், புலி" சின்னம் பொறித்த தமிழ்க் கொடியினை கையிலேந்தி,

**"ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்! நீ**
**தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே!"**

என்று, இந்தித் திணிப்பு எதிர்ப்பு போர்ப்பரணி பாடி, தமிழ்மொழி காக்கும் போர் வீரராய் முன்வந்தார்.

அன்னைத் தமிழ் காக்க, முதற்கட்ட இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு, சிறை சென்ற நடராசன்15.01.1939அன்றும்;தாளமுத்து12.03.1939 அன்றும் வீர மரணம் அடைந்தனர்.தமிழக மக்களின் தொடர் போராட்டத்தினால், அரசு 21.02.1940ல் கட்டாய இந்தி திணிப்பை கைவிடும் முடிவுக்கு வந்தது.

தாராளமாகவும் ஏராளமாகவும் தமிழ்ச் சொற்கள் இருந்தும், பிறமொழிச் சொல் கலந்து பேசியும், எழுதியும் தமிழுக்கு ஊறு விளைத்திட முனைந்தோரால், முடிந்தளவு முயன்றும், யாதொன்றும் புரிந்திட இயலாது, என்று முடங்கிடும் நிலையில் என்றென்றும் மாறாத இனிமைத் தமிழுக்கு ஒன்றிய அரசால் ஆபத்து வரத் துணிந்த போது,

**"செந்தமிழுக்கு தீங்கொன்று வந்துற்ற பின்னும் இத்**
**தேகம் இருந்தென்ன லாபம்?"**

என, தனக்குத் தானே கேள்வி எழுப்பிக் கொண்ட அன்னைத் தமிழின் அருந்தவப் புதல்வர்களாம் கீழுப்பழூவூர் சின்னச்சாமி, விருகம்பாக்கம் அரங்கநாதன், கோடம்பாக்கம் சிவலிங்கம், மாயவரம் சாரங்கபாணி, விராலிமலை சண்முகம், கீரனூர் முத்து, பீளமேடு தண்டபாணி, சத்தியமங்கலம் முத்து, அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன் தீக்குளித்தும், துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் ராஜேந்திரன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோரின் தீரத்தை நினைவு கூர்ந்திடும் நாள் தான் வருகிற 25.01.2024 மொழிப் போர் தியாகிகள் நினைவு தினம் ஆகும்.

உலக வரலாற்றில், நாட்டின் விடுதலைக்காக, இனப் போராட்டத்திற்காக தங்களை மாய்த்துக் கொண்டோர் நிரம்ப உண்டு. ஒரு மொழிக்காக, தங்களது வாழ்க்கையையே சுருக்கிக் கொண்டு கருகியவர்கள் உண்டு என்றால், அது தமிழ் மக்களையேச் சாரும்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியில் வந்த நமது கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள், 1972ஆம் ஆண்டு கோவையில், தி.மு.க. மாணவரணியின் சார்பில் நடைபெற்ற மாநாட்டில் 18 வயது இளைஞராக உரையாற்றிய போது...

"மொழிக்காக நம்முடைய இனத்திற்காக போராடுகிறோம். போராடுகிற நேரத்திலே நம்முடைய உயிரை இழக்கிற தியாகத்தைச் செய்வதற்குக் கூடக் காத்திருக்கிறோம். என்னுடைய தந்தைக்கு நான்கு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். எனவே, அந்த நான்கு ஆண் பிள்ளைகளில் ஒரு ஆண்பிள்ளை போய் விடுவதால் என்னுடைய தந்தை நிச்சயமாக கவலைப்பட மாட்டார். அதுவும் மொழிக்காக, ஒரு இனத்திற்காக தனயனை இழந்த தந்தை என்று என்னுடைய தந்தைக்குப் பாராட்டுக் கிடைக்கும். பாராட்டுகின்ற பெருமையை வாங்கித் தந்த மகிழ்ச்சி எனக்குச்சேரும் அல்லவா?"



- என்று வீர உரையாற்றி, தமிழ் மொழிக்காக தனது இன்னுயிரையும் துறப்பது எனக்கு பெருமை உடையது என, தனது 18வது வயதில் சபதமேற்று; இன்றும் தமிழ் மொழிக்கான அனைத்துப் போராட்டத்திலும் தலைமகனாக விளங்குகிறார்.

இந்தி பேசாத மக்களின் மீது இந்தியை திணித்தே தீருவேன் என்று ஒன்றியத்தில் ஆட்சி நடத்தும் பாசிச பா.ஜ.க. அரசும், அதன் தலைவர்களும் அனைத்து வழிகளிலும் இந்தியை திணிப்பதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். தமிழ்நாட்டுக்கு வந்தால் தொன்மையான மொழி தமிழ் என்று நாக்கில் தேன் தடவுவதும், டெல்லிக்கு சென்றதும் நஞ்சைப் பரப்புவதும் அவர்களுக்கு வாடிக்கையாகி விட்டது.

இந்தி மொழிக்கு மட்டும் மக்களின் வரிப்பணத்தில் 'நாள்வாரம்மாதம்' எனக் கொண்டாடுவதும், இந்தி மொழியை அலுவலகங்களில் பயன்படுத்தக் கட்டாயப் படுத்துவதும், இந்தியைத் தேசிய மொழி என்று இல்லாத ஒன்றை மீண்டும் மீண்டும் இட்டுக்கட்டுவதும் எந்த வகையில் சமத்துவமாகும்? நாட்டிலே செம்மொழிகள் பல இருக்க, இந்திக்கு மட்டும் நாள், வாரம், மாதம் எனக் கொண்டாட வேண்டிய அவசியம் என்ன?

மேலும், ஒன்றிய பொதுத் துறை நிறுவனமான "LIC" நிறுவனத்தின் வலைத்தள பக்கத்தை முழுக்க முழுக்க இந்தி மயமாக்கி, கழகத் தலைவர்மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உட்பட பல்வேறு தமிழ் ஆர்வலர்களின் கண்டனத்திற்கு பிறகு, வலைதள பக்கத்தை ஆங்கில மொழிக்கு மாற்றினர்.

இவ்வளவு ஏன், தேசியக் கல்விக் கொள்கையில் இருக்கும் இந்தி திணிப்பு தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கைக்கு எதிரானது. எனவே, கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால், ஒன்றிய அரசின் "சமக்ரா சிஷா" திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டின் கல்வித் துறைக்கு வரவேண்டிய நிதி ரூபாய் இரண்டாயிரத்து இருநூறு கோடியை ஒதுக்காமல், பி.எம்.ஸ்ரீ பள்ளிகளில் தேசிய கல்விக் கொள்கையை முழுமையாக அமல்படுத்தினால் தான் நிதியை வழங்குவோம் என அராஜகப்போக்கை கடைபிடிக்கிறது பாசிச பா.ஜ.க. அரசு.

மழை, வெள்ளம் உள்ளிட்ட இயற்கை பேரிடர்களின் பெரும் பாதிப்பை சந்தித்த தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்க மனமில்லாமல், ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது. அதே நிலையை கல்விக்கும் கடைபிடித்து, ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்தியை திணிக்கிறது; தமிழை தடுக்கிறது; தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது.

இந்தியை எப்படியாவது பின்வாசல் வழியாக திணிக்க துடிக்கும் ஒன்றிய அரசு ஒன்றை உணர வேண்டும்; இந்தி திணிப்புக்கு ஆதரவு தெரிவித்து கைக் கட்டி, வாய் பொத்தி அமைதி காக்க தமிழ்நாட்டில் நடப்பது அடிமைகளின் ஆட்சி அல்ல! பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியில் கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடத்தும் திராவிட மாடல் ஆட்சி!

இந்தியைத் திணிக்க முயன்றோருக்கும், முயல்வோருக்கும் அச்சத்தை உருவாக்கிவிட்டுச் சென்றுள்ள மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்திட, பொதுக்கூட்டங்கள் நடத்தி அவர்கள் கொண்டிருந்த தூய தமிழுணர்வுடன் நாமும் வாழ்ந்திட வேண்டும் என்ற சூளுரையை இந்நாளில் மேற்கொண்டிட, கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு முழுவதும் பட்டிதொட்டி முதல் பட்டினக்கரை வரை, தி.மு.க. மாணவர் அணியின் சார்பில், கீழ்க்காணும் உரையாற்றுவோர் பட்டியல் வெளியிடப்படுகிறது.

**கழகத் தலைவர் தலைமையில் இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்! அன்னைத் தமிழை உயிரினும் மேலாக காப்போம்!**

**வாழ்க தமிழ்! வெல்க தமிழ்!**

**தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!**







### உரையாற்றுவோர் பட்டியல்

| | |
|---|---|
| பல்லாவரம் - | **கழகத் தலைவர் -** மாண்புமிகு **தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள்.<br>பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி.,<br>மாண்புமிகு தா.மோ. அன்பரசன் |
| காஞ்சிபுரம் - | பொதுச் செயலாளர் மாண்புமிகு **துரைமுருகன்**<br>எஸ். ஜெகத்ரட்சகன்<br>க. சுந்தர், எம்.எல்.ஏ., |
| திருச்சி - | முதன்மைச் செயலாளர் மாண்புமிகு கே.என். நேரு<br>க. வைரமணி<br>குடியாத்தம் பெரிய கோட்டீஸ்வரன்<br>பி.எம். ஆனந்த் |
| திண்டுக்கல் - | மாண்புமிகு ஐ. பெரியசாமி<br>ஐ.பி. செந்தில்குமார், எம்.எல்.ஏ.,<br>கோவை அ. திராவிடமணி |
| சிதம்பரம் - | மாண்புமிகு முனைவர் க. பொன்முடி<br>மாண்புமிகு எம்.ஆர். கே.பன்னீர்செல்வம்<br>தூத்துக்குடி தமிழ்பிரியன் |
| மதுரை - | கனிமொழி கருணாநிதி, எம்.பி.,<br>கோ. தளபதி<br>குடந்தை இரமேஷ்<br>அதலை பி. செந்தில்குமார் |
| திருப்பூர் - | ஆ. இராசா, எம்.பி.,<br>க. செல்வராஜ், எம்.எல்.ஏ.,<br>அன்னவயல் கணேசன் |
| திருவள்ளூர்- | அந்தியூர் ப. செல்வராஜ், எம்.பி.,<br>தஞ்சை கூத்தரசன்<br>எஸ். சந்திரன், எம்.எல்.ஏ.,<br>உடுமலை தண்டபாணி |
| மதுரவாயல் - | இளந்தலைவர்,மாண்புமிகு **தமிழ்நாடு துணை முதலமைச்சர்** அவர்கள்<br>மாண்புமிகு மா.சுப்ரமணியன் |
| கும்பகோணம் - | ஆர்.எஸ். பாரதி<br>சு. கல்யாணசுந்தரம், எம்.பி.,<br>சூர்யா வெற்றிகொண்டான் |
| திருப்பத்தூர் - (வேலூர்) | சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.,<br>க. தேவராஜ், எம்.எல்.ஏ.,<br>கவிஞர் ஏ. ராஜசேகர்<br>தாவுத் அபுபக்கர் |
| சேலம் - | மாண்புமிகு எ.வ. வேலு<br>மாண்புமிகு ஆர். இராஜேந்திரன்<br>சென்னை மதிவாணன்<br>சேலம் இரா. தமிழரசன் |
| சிவகங்கை - | திருச்சி என். சிவா, எம்.பி.,<br>மாண்புமிகு கே.ஆர். பெரியகருப்பன்<br>கே.வி. ராமகிருஷ்ணன்<br>பூர்ணசங்கீதா |
| திருவண்ணாமலை- | டி.கே.எஸ். இளங்கோவன்<br>தா. பழூர். இளஞ்செழியன்<br>எஸ்.கே. ஸ்ரீராம் |
| தியாகராயநகர் - | தயாநிதி மாறன், எம்.பி.,<br>தா. வேலு, எம்.எல்.ஏ.,<br>எஸ். மோகன்<br>குடந்தை பாஸ்கர் |
| நாமக்கல் - | கடலூர் இள. புகழேந்தி<br>கே.ஆர்.என்.ராஜேஸ்குமார், எம்.பி.,<br>ஆரணி மாலா |
| பொள்ளாச்சி - | பொன். முத்துராமலிங்கம்<br>தளபதி முருகேசன்<br>சேப்பாக்கம் பிரபாகரன் |
| திண்டிவனம் - | மாண்புமிகு கு. பிச்சாண்டி<br>மரு. ப. சேகர்<br>கொரஞ்சூர் முனுசாமி |
| இராமநாதபுரம்- | எஸ்.எஸ். பழனிமாணிக்கம்<br>காதர்பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ.,<br>வழக்கறிஞர் இரா. மணிமுடி |
| கோயம்புத்தூர் - | மாண்புமிகு முனைவர் கோவி. செழியன்<br>மாண்புமிகு அன்பில் மகேஷ் பொய்யாமொழி<br>நா. கார்த்திக்<br>நெல்லை ஜான் |
| இராணிப்பேட்டை - | ப. தாயகம் கவி, எம்.எல்.ஏ.,<br>மாண்புமிகு ஆர். காந்தி<br>ஈரோடு சத்தியவதி |
| அம்பாசமுத்திரம் - | சுப. வீரபாண்டியன்<br>இரா. ஆவுடையப்பன்<br>மதுரை குருசாமி |
| திருநெல்வேலி - | ஏ.கே.எஸ். விஜயன்<br>டி.பி.எம். மைதீன்கான்<br>தருமபுரி அதியமான்<br>உடன்குடி தனபால் |
| விழுப்புரம் - | குத்தாலம் பி. கல்யாணம்<br>பொன். கௌதமசிகாமணி<br>தக்கோலம் தேவபாலன் |
| நாகர்கோவில் - | கம்பம் செல்வேந்திரன்<br>ரெ. மகேஷ்<br>செந்தூர் பாலகிருஷ்ணன் |
| நாகப்பட்டினம் - | முனைவர் சபாபதிமோகன்<br>என். கௌதமன்<br>ஆக்காட்டி ஆறுமுகம் |
| அரியலூர் - | கவிச்சுடர் கவிதைப்பித்தன்<br>மாண்புமிகு எஸ்.எஸ். சிவசங்கர்<br>செங்கை சந்தானம்<br>சன். சங்கர் |
| கரூர் - | வழக்கறிஞர் இரா. கிரிராஜன், எம்.பி.,<br>மாண்புமிகு வி. செந்தில்பாலாஜி<br>தீக்கனல் கருணாநிதி<br>கோபி குமணன் |
| திருவாரூர் - | பொள்ளாச்சி மா. உமாபதி<br>பூண்டி கே. கலைவாணன், எம்.எல்.ஏ.,<br>குடியாத்தம் புவியரசி |
| ஆவடி - | திண்டுக்கல் ஐ. லியோனி<br>மாண்புமிகு சா.மு. நாசர்<br>சி. ஜெரால்டு<br>வண்ணை புகாரி |
| பெரம்பூர் - | வாகை சந்திரசேகர்<br>ஆர்.டி. சேகர், எம்.எல்.ஏ.,<br>புலவர் சாமி நாகப்பன் |
| பெரம்பலூர் - | வி.பி. இராஜன்<br>வீ. ஜெகதீசன்<br>ஈரோடு இளையகோபால் |
| பாலக்கோடு - | குத்தாலம் அன்பழகன்<br>பி. பழனியப்பன்<br>ஆலந்தூர் மலர்மன்னன்<br>புலவர் பெரியாழ்வார் |
| கிருஷ்ணகிரி - | கவிஞர் ஈரோடு இறைவன்<br>தே. மதியழகன், எம்.எல்.ஏ.,<br>ஆலந்தூர் ஒப்பிலாமணி<br>மயிலாடுதுறை அருள்தாஸ் |
| திருவொற்றியூர் - | மருத்துவர் நா. எழிலன், எம்.எல்.ஏ.,<br>எஸ். சுதர்சனம், எம்.எல்.ஏ.,<br>தி.நகர் சண்முகநாதன்<br>எழும்பூர் கோபி |
| கள்ளக்குறிச்சி - | நெல்லிகுப்பம் புகழேந்தி<br>வசந்தம் க. கார்த்திகேயன், எம்.எல்.ஏ.,<br>நாகம்மை கருப்பையா |
| ஆத்தூர் - (சேலம்) | பேராசிரியர் கான்ஸ்டன்டைன் இரவீந்திரன்<br>எஸ்.ஆர். சிவலிங்கம்<br>கோதை மதிவாணன் |
| மேட்டுப்பாளையம் - | தமிழன் பிரசன்னா<br>தொண்டாமுத்தூர் ரவி<br>கு. மொழிமாறன்<br>வி.ஜி. கோகுல் |
| வேலூர் - | இ. பரந்தாமன், எம்.எல்.ஏ.,<br>ஏ.பி. நந்தகுமார், எம்.எல்.ஏ.,<br>ஆவடி கா.மு. ஜான் |
| கடலூர் - | எஸ்.கே.பி. கருணாநிதி<br>கவிஞர் நன்மாறன்<br>நளினி சாரங்கன் |
| தருமபுரி - | டி.எம். கதிர்ஆனந்த், எம்.பி.,<br>தடங்கம் பெ. சுப்ரமணி<br>வெ. அன்புவாணன்<br>ஒசூர் அப்துல்ரகுமான் |
| விருதுநகர் - | புதுக்கோட்டை விஜயா<br>மாண்புமிகு தங்கம் தென்னரசு<br>நெல்லை முத்தையா |
| ஒசூர் - | வி.பி. கலைராஜன்<br>ஒய். பிரகாஷ், எம்.எல்.ஏ.,<br>பிரம்மபுரம் பழனி |
| திருச்செங்கோடு- | நாஞ்சில் சம்பத் |

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்